ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ரு'தி$_3$ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ முந்நீர் ஞாலம் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ முந்நீர் ஞாலம் ॥

அழகரை முற்றும் அனுபவிக்க ஏலாது ஆழ்வார் கலங்க

‡முந்நீர் ஞாலம் படைத்த⋆ எம் முகில் வண்ணனே!⋆
அந்நாள் நீ தந்த⋆ ஆக்கையின் வழி உழல்வேன்⋆
வெந்நாள் நோய் வீய⋆ வினைகளை வேர் அறப்பாய்ந்து⋆
எந்நாள் யான் உன்னை⋆ இனி வந்து கூடுவனே (1)

வன் மா வையம் அளந்த⋆ எம் வாமனா⋆ நின்
பன் மா மாயப்⋆ பல் பிறவியில் படிகின்ற யான்⋆
தொன் மா வல்வினைத்⋆ தொடர்களை முதல் அரிந்து⋆
நின் மா தாள் சேர்ந்து⋆ நிற்பதெஞ்ஞான்று கொலோ (2)

கொல்லா மாக்கோல்⋆ கொலை செய்து பாரதப் போர்⋆
எல்லாச் சேனையும்⋆ இரு நிலத்தவித்த எந்தாய்⋆
பொல்லா வாக்கையின்⋆ புணர்வினை அறுக்கல் அறா⋆
சொல்லாய் யான் உன்னைச்⋆ சார்வதோர் சூழ்ச்சியே (3)

சூழ்ச்சி ஞானச்⋆ சுடரொளி யாகி⋆ என்றும்
ஏழ்ச்சிக் கேடின்றி⋆ எங்கணும் நிறைந்த எந்தாய்⋆
தாழ்ச்சி மற்றெங்கும் தவிர்ந்து⋆ நின் தாள் இணைக்கீழ்
வாழ்ச்சி⋆ யான் சேரும் வகை⋆ அருளாய் வந்தே (4)

வந்தாய் போலே⋆ வந்தும் என் மனத்தினை நீ⋆
சிந்தாமல் செய்யாய்⋆ இதுவே இதுவாகில்⋆
கொந்தார் காயாவின்⋆ கொழு மலர்த் திரு நிறத்த
எந்தாய்⋆ யான் உன்னை⋆ எங்கு வந்தணுகிற்பனே (5)

கிற்பன் கில்லேன்⋆ என்றிலன் முன நாளால்⋆
அற்ப சாரங்கள் அவை⋆ சுவைத் தகன்றொழிந்தேன்⋆
பற்பல் ஆயிரம்⋆ உயிர் செய்த பரமா⋆ நின்
நற் பொற் சோதித்தாள்⋆ நணுகுவதெஞ் ஞான்றே (6)

www.prapatti.com

எஞ்ஞான்று நாம்⋆ இருந்திருந்திரங்கி நெஞ்சே!⋆
மெய்ஞ் ஞானம் இன்றி⋆ வினையியல் பிறப்பழுந்தி⋆
எஞ்ஞான்றும் எங்கும்⋆ ஒழிவற நிறைந்து நின்ற⋆
மெய்ஞ் ஞானச் சோதிக்⋆ கண்ணனை மேவுதுமே (7)

மேவு துன்ப வினைகளை⋆ விடுத்துமிலேன்⋆
ஓவுதல் இன்றி⋆ உன் கழல் வணங்கிற்றிலேன்⋆
பாவு தொல் சீர்க் கண்ணா!⋆ என் பரஞ்சுடரே⋆
கூவுகின்றேன் காண்பான்⋆ எங்கெய்தக் கூவுவனே (8)

கூவிக் கூவிக்⋆ கொடுவினைத் தூற்றுள் நின்று⋆
பாவியேன் பல காலம்⋆ வழி திகைத்தலமர்கின்றேன்⋆
மேவி அன்றா நிரை காத்தவன்⋆ உலகம் எல்லாம்⋆
தாவிய அம்மானை⋆ எங்கினித் தலைப்பெய்வனே (9)

தலைப்பெய் காலம்⋆ நமன் தமர் பாசம் விட்டால்⋆
அலைப்பூண் உண்ணும்⋆ அவ்வல்லல் எல்லாம் அகல⋆
கலைப்பல் ஞானத்து⋆ என் கண்ணனைக் கண்டு கொண்டு⋆
நிலைப்பெற்றென் நெஞ்சம் பெற்றது⋆ நீடுயிரே (10)

‡உயிர்கள் எல்லா⋆ உலகமும் உடையவனை⋆
குயில் கொள் சோலைத்⋆ தென் குருகூர்ச் சடகோபன்⋆
செயிரில் சொல் இசை மாலை⋆ ஆயிரத்துள் இப்பத்தும்⋆
உயிரின்மேல் ஆக்கை⋆ ஊனிடை ஒழிவிக்குமே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com